வெளியீடு: 24-3-2004

Iss ıed: 24-3-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, பிப்ரவரி 12, 2004–தொகுதி 57–எண் 2

**Thursday, the 12th February, 2004 – Volume 57 – No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

232/2004

12-02-2004

உள்ளடக்கம்


பக்கங்கள்

**1. வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 79 - 122

**2. அறிக்கைகள் அளித்தல்—**

(அ) மதிப்பீட்டுக் குழு 122 - 123

(ஆ) பொதுக் கணக்குக் குழு 123

(இ) மனுக்கள் குழு 123

(ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 123

**3. முன்பண மானியக் கோரிக்கைகள், 2004-2005, அளித்தல்—**

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 124 - 127

**4. அறிவிப்புகள்—**

(அ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2004-2005, மொழிதல் (ஆ.செ.) 128

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.) 133

**5. முன்பண மானியக் கோரிக்கைகள், 2004-2005, வாக்கெடுப்பு—**

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 128 - 132

**6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2004 133 - 134

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 133, 134

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 134 - 138

185390
சென்னை-600 008

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 29, சுபானு-திருவள்ளுவர் ஆண்டு 2035

## 2004 பிப்ரவரி 12, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்"

இயலும் இடங்களில் எல்லாம் செயல் முடிப்பது நலம் தரும். இயலாத இடமாயின் அதற்கேற்ற வழியை அறிந்து அந்தச் செயலை முடிக்க வேண்டும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### •உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 41, திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**41—**

### அவசர ஊர்திகள்

**•23263—திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை ஹைகிரவுண்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இயங்காமல் நிற்கும் அவசர ஊர்திகள் மற்றும் அமரர் ஊர்திகள் இயங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 பிப்ரவரி 12

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மருத்துவமனையில் 6 ஆம்புலன்ஸ்களும் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. 2 அமரர் ஊர்திகள் மிகவும் பழமையான நிலையில் இருப்பதால் அடிக்கடி பழுது ஏற்பட்டு பணிமனைக்குக்கொண்டு சென்று பழுதுகள் சரிபார்க்கப்பட்டு மீண்டும் இயக்கப்படுகின்றன. இதில் ஓர் ஊர்தி கழிவு செய்யப்படும் கருத்துரு பரிசீலிக்கப்பட்டு அதற்குப் பதிலாக வேறொரு ஆம்புலன்ஸ் வாகனம், அமரர் ஊர்தியாக மாற்றப்பட உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**42—**

## அம்மை குத்துதல்

**•42394—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தை பிறந்தவுடன் அம்மை குத்தும் பழக்கம் நிறுத்தப்பட்டு விட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலும் மற்றும் இந்தியாவிலும் அம்மை நோய் 1978 ஆம் ஆண்டிலேயே ஒழிக்கப்பட்டுவிட்டது. அம்மை நோயை உண்டாக்கும் கிருமிகள் நாட்டிலிருந்து அடியோடு அகற்றப்பட்டு விட்டதால் யாருக்கும் அம்மை நோயால் பாதிப்பு இல்லை. ஆகவே அம்மை குத்துதல் தேவைப்படாததால் அது நிறுத்தப்பட்டு விட்டது.



2004 பிப்ரவரி 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**43—**

## சத்துணவுக் கூடங்கள்

**•32333—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள அனைத்து பள்ளிகளின் சத்துணவுக் கூடங்களுக்கு எல்.பி.ஜி. சமையல் எரிவாயு அடுப்பை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சத்துணவுக் கூடங்களில் விறகு அடுப்புக்குப் பதிலாக எல்.பி.ஜி. எரிவாயு அடுப்பைப் பயன்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சீர்காழி தொகுதியில், சீர்காழி ஒன்றியம் மற்றும் கொள்ளிடம் ஒன்றியம் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் சுமார் 203 சத்துணவுக் கூடங்களும் 81 ஊட்டச் சத்து மையங்களும் உள்ளன. இவற்றில் சமையல் செய்வதற்கு விறகுகளைப் பயன்படுத்துவதால் அருகிலுள்ள பள்ளி மாணவ, மாணவிகள் புகையினால் மிகவும் பாதிப்பு அடைகின்றனர். மேலும், இதற்கான செலவினங்களும் அதிகமாக உள்ளன. சுற்றுப்புறமும் மாசுபடுகின்றது. எனவே இதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு மேற்கண்ட அனைத்து சத்துணவுக் கூடங்கள் மற்றும் ஊட்டச் சத்து மையங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்க முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2004 பிப்ரவரி 12

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 41,118 பள்ளி சத்துணவு மையங்களும், 30,639 குழந்தை நல மையங்களும் ஆக மொத்தம் 71,757 மையங்கள் உள்ளன. அனைத்து மையங்களுக்கும் எல்.பி.ஜி. சமையல் எரிவாயு பயன்படுத்த அனுமதி வழங்க வேண்டுமென்றால் கொள்கை அளவில்தான் முடிவு எடுக்க வேண்டும். சீர்காழி தொகுதியில் அனைத்துப் பள்ளிகளிலுள்ள சத்துணவு மையங்களில் மட்டும் இதைப் பயன்படுத்துவது குறித்து தனியாக முடிவு எடுக்க முடியாது. தற்பொழுது சீர்காழி தொகுதியில் 203 பள்ளி சத்துணவு மையங்களில் ஒரு பயனாளிக்கு 11 பைசா வீதம் விறகிற்கான செலவு 82,067 ரூபாய் செலவிடப்படுகிறது. ஒரு மாதத்திற்கு ஆகும் தொடர் செலவினம் 1,29,220 ரூபாய். இதனால் எல்.பி.ஜி. சமையல் எரிவாயு பயன்படுத்தப்பட்டால் ஒரு மாதத்திற்கு ஆகும் தொடர் செலவினத்தில் மிகைச் செலவு 47,153 ரூபாய். மேலும், தொடரா செலவு 5,07,500 ரூபாய். தற்போது அரசு சந்தித்து வரும் நிதி நெருக்கடியில் மேற்காணும் செயற்குறிப்பு தொடர்பாக பரிசீலனை செய்ய இயலாது. இருந்தாலும் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தத் தொகுதிக்கு மட்டும் சமையல் எரிவாயு வாங்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரேயானால் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டிலே செய்ய இயலாவிட்டாலும் வருகின்ற நிதியாண்டிலாவது சமையல் எரிவாயு இணைப்பு கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுக்கிறீர்களா என்று கேட்கிறார்கள். (சிரிப்பு) மாதா மாதம் சம்பளத்தில் பிடித்துக்கொள்ளச் சொல்கிறீர்களா? (சிரிப்பு)

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து மாதா மாதம் கொடுப்பது என்பது ரொம்ப சிரமமாக இருக்கும். அப்படிச் செய்வது நடைமுறையில் சிரமமாக இருக்கும்.



2004 பிப்ரவரி 12]

முற்பகல் 10-05

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கலாம் என்று சொன்னார்கள். அதற்கு இப்போதுள்ள நிலைமையில் நாங்கள் தயாராக இருந்தாலும், வருகின்ற காலத்தில், தொடர்ச்சியாக அதை நிலை நிறுத்துவதற்கு, நடத்துவதற்கு ஒவ்வொரு மாதமும் அந்த கேஸ் வாங்கிக் கொடுப்பதற்கு இயலுமா என்கின்ற கேள்வி எழுகிறது. அதை நிச்சயமாகச் செயல்படுத்த முடியாது. ஆரம்ப கட்டத்தில் வேண்டுமென்றால் நிதி ஒதுக்கி சட்டமன்ற உறுப்பினர்கள் வாங்கித் தரலாம். ஆனால் அந்தத் தொடர்ச் செலவினங்களை ஏற்றுக்கொள்வது என்பது மிகக் கடுமையான நிலையாக இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்து, வருகின்ற ஆண்டிலாவது—இது ஒரு நல்ல திட்டம்தான். இன்றைக்கு நாடு வளர்ந்துகொண்டிருக்கின்ற நிலையில், அங்கே இருக்கின்ற சமையலர்களும், குழந்தைகளும் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு—இதை பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் சத்துணவுப் பயனாளிகளுக்கு உணவீட்டுச் செலவினமாக வழங்கப்பட்டு வந்த இந்தத் தொகையே 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை 6 பைசா என்றுதான் உயர்த்தப்பட்டு வந்தது. அதிலே எரிபொருள் செலவும் உள்ளடக்கித்தான் 6 பைசாவை ஏற்றி வழங்கப்பட்டு வந்தது. ஆனால் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனித நேயத்தோடு, இந்த உணவீட்டுச் செலவினத்தை, எரிபொருள் உட்பட முழுவீச்சிலே 23 பைசாவிலேயிருந்து 35 பைசாவாக 12 பைசாவை ஒரே நேரத்தில் உயர்த்தி வழங்குவதற்கு ஆணையிட்டவர்கள் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை வழங்குகிறபோதுகூட மாண்புமிகு

அம்மா அவர்கள் சொன்னார்கள், மேலும் இந்தத் தொகையை உயர்த்தித் தருவதற்குப் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார்கள். மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக்கொண்டு சென்று அரசு சிந்திக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**44—**

**தாட்கோ கடன்**

***24228—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோவில் ஆதிதிராவிடர் மகளிர் குழுக்களுக்குக் கடன் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாட்கோ மூலம் ஆதிதிராவிடர் மகளிர் குழுக்களுக்குக் கடன் உதவி வழங்கும் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாட்கோ மூலமாக ஆதிதிராவிட மகளிர் எத்தனை பேர் பயன் பெற்றார்கள்? அதில் மதுரை மாவட்டத்திலே எத்தனை மகளிர் பயன்பெற்றார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று



2004 ஜனவரி மாதம் வரை, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 2185.93 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளார்கள். இதன் பயனாக 6,227 மகளிர் குழுக்களைச் சேர்ந்த 1,89,888 மகளிர் ரூ. 1783.41 இலட்சம் அளவிற்கு வங்கிக் கடன் பெற்று வருவாய் தரக்கூடிய பல்வேறு சிறு தொழில்களைச் செய்வதன் மூலம் தங்களது வாழ்கைத் தரத்தை உயர்த்தி வருகின்றனர். மதுரை மாவட்டத்தில் மட்டும் 2004 ஜனவரி மாதம் முடிய 78 மகளிர் குழுக்களைச் சேர்ந்த 4,156 மகளிருக்கு ரூ.53.94 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு, ரூ.80.65 இலட்சம் அளவிற்கு வங்கிக் கடன் பெற்றுள்ளனர் என்பதை மிக்க பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட தலைவி, புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோவில் கடன் வழங்குகிறபோது நாம் ஒவ்வொரு கடனுக்கும் margin money-யை மட்டும் தருகிறோம். மீதியை தேசிய வங்கிகள் தர வேண்டும். தேசிய வங்கிகளிடம் தாழ்த்தப்பட்ட மக்கள் கடன் பெறுவதற்காக முயலுகிறபோது, அதிலே பல இடையூறுகளும் அலைகழிப்புகளும் நிகழ்கின்றன. எனவே தாட்கோவே தனி வங்கியைத் தொடங்குகிற திட்டம் உண்டா? தாட்கோ தேசிய வங்கிகளிலே அதனுடைய தொகையை மிகப் பெரும் அளவிலே முதலீடு செய்திருந்தாலும்கூட, அது பயன்படாத வகையிலே, தேக்கம் அடைகிற நிலையிலே இருக்கிறது. எனவே தாட்கோவே தனது வங்கியை தொடங்குகிற திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா? மகளிர் குழுக்களுக்கு மட்டுமே கடன் தராமல் தனி நபர்களுக்கும் பாதி—முழுக்க முழுக்க மகளிர் குழுக்களுக்குத் தந்தால், தனி நபர்கள் கடன் பெறுவதிலே, தொய்வு, ஒரு தேக்கம் ஏற்படுகிறது. எனவே தனி நபர்களுக்கும் 50 விழுக்காடு தருகிற திட்டம் அரசிடம் உண்டா என நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் தாட்கோ மூலமாகவே கடன் கொடுக்கப்பட்டு வந்தது. அது தி.மு.க. ஆட்சியில் சரியான முறையில்

பயன் தராமல், ஆதிதிராவிட மக்கள் முறையாக பயன் பெற்று முன்னேற முடியாத நிலைமையில் இருந்ததன் விளைவாக நம்முடைய இதய தெய்வம், தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சுய உதவிக் குழுக்களை அமைத்து, குழுக்கள் மூலமாக கடன்களை வழங்க வேண்டும்; அதுவும் குறிப்பாக வழங்கப்படுகிற திட்டத்தில் 75 சதவிகிதம் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிருக்கும், 25 சதவிகிதம் தனி நபர் கடனாகக் கொடுக்க வேண்டும் என்றும் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். தனி நபர் கடன், கிட்டத்தட்ட இளைஞர்கள், பயிற்சி பெற்றவர்கள் குறிப்பாக வேலைவாய்ப்பு பயிற்சி பெற்றவர்கள், டிரைவிங் போன்ற பல்வேறு பயிற்சி முடித்து அந்த லைசென்ஸ் வைத்திருப்பவர்கள், வாகன கடன் அல்லது தொழிற் பயிற்சி, மெக்கானிசம் போன்ற பயிற்சி பெற்றவர்களுக்கு திட்டங்கள் மூலமாக, தாட்கோ மூலமாக, வங்கிகள் மூலமாக கடன் வழங்கப்பட்டு வருகிறது. சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் மாதா மாதம் சந்தா வசூல் செய்கிறார்கள். அந்த வசூல் செய்த பணத்தை வங்கிகளிலே நேரடியாகச் செலுத்துகிறார்கள். அவர்கள் செலுத்துகிற சந்தாவோடு தாட்கோ திட்டத்தின் மூலமாகக் கொடுக்கப்படுகிற அந்த மானியக் கடன்களையும் பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக அமைகிறது. கடன் வாங்குகிறவர்கள் திரும்பச் செலுத்துவதற்கு சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள்தான் முறையாக திரும்பக் கடனைச் செலுத்தி வருகிறார்கள். ஆகையால்தான் இப்போது தேசிய வங்கிகள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை கொடுத்து கடன்கள் வழங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனியாக, தாட்கோ மூலமாக வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது. தாட்கோ மூலமாக கொடுக்க வேண்டும் என்றால்—அவரவர் வசூல் செய்கிற அந்த சந்தா பணத்தை ஆங்காங்கே அருகில் இருக்கின்ற வங்கிகளில் செலுத்தி வங்கிகள் மூலமாக கடன் பெறுவதற்கு மகளிருக்கு வாய்ப்பாக அமைகிற காரணத்தால், ஆங்காங்கே அருகிலே இருக்கின்ற வங்கிகள் மூலமாக கடன் கொடுப்பதற்கு, தாட்கோ மூலமாக அந்த வங்கிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. வில்வநாதன்.





**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி ஏற்பட்ட பிறகு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரணாக விளங்கி வருகிறார். தமிழகத்தினுடைய சார்பிலே டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சார்பிலே நடைபெறுகிற அரசு, ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்படுகின்ற மானியக் கடன், சப்சிடி கடன்களை வழங்குவதற்கு சில வங்கிகள் முன்வருவதில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து, கடந்த திமுக. ஆட்சியில் அது போன்ற நிலைமைகளை — மானியத்தோடு கடன் வழங்க வேண்டும் என்று இருந்ததை, வங்கிகள் கடன் வழங்காமல் மானியத்தை மட்டும் வழங்கக்கூடிய நிலைமைகள் எல்லாம் கடந்த காலங்களில் நடந்தது உண்மை. அப்படி நடந்திருப்பதன் காரணமாக ஆதிதிராவிட மக்கள் முறையாக பயன்பெற முடியாமல் இருந்ததை நாம் அனைவரும் நன்கு அறிவோம். தமிழ்நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள். ஆகவே இப்போது நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இதுபோன்ற குழுக்களை அமைத்து, நேரடியாக அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற மானியத் தொகையோடு, வங்கியும் சேர்ந்து முறையாகக் கடன் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்னோடி வங்கிகளுடைய அலுவலர்களை எல்லாம் அழைத்து, இதுபோன்ற குழுக்களுக்கு முறையாகக் கடன் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டதன் பேரில், அம்மா அவர்களின் ஆணையின் பேரில் இப்போது நேரடியாக மானியத்தோடு கடன் தொகையும் பெற்று பயன்பெற்று வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்கிறபோது, குழுக்களுக்கு கடன் வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை

நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் தனி நபர் கடன் பெற முயற்சிக்கிறபோது, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே அந்தத் தனி நபர் கடன் கொடுப்பதற்கு மறுத்து வருகிறார்கள். இதுசம்பந்தமாக ஏற்கெனவே வங்கிகளினுடைய கூட்டத்திலேகூட சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலே நானும், நம்முடைய கோவை மாவட்டத்திலே இருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் வங்கிகளினுடைய அலுவலரிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறோம். ஆகவே தனி நபர் கடன், நம்முடைய தேசியமயமாக்கப்பட்ட வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகளிலே கிடைப்பதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், இந்தக் குழுக்களுக்கு மானியம் வழங்குகிறபோது, நகரப் பகுதியிலே இருக்கிறவர்களுக்கு இந்த தாட்கோ மூலமாக மானியங்கள் வழங்கப்படுகின்றது. நகரப் பகுதியிலே இருக்கிற இளைஞர்கள், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்களுக்கு இந்த தனி நபர் கடன் பெறுவதிலே சிரமம் இருக்கிறது. ஆகவே இந்த தனி நபர் கடன்கள், நகரப் பகுதியிலே இருக்கிற இளைஞர்களுக்கு அதிகமான அளவிலே கிடைக்கிற வகையிலே, இந்த 'மானியங்களை அதிகமாக உயர்த்தித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியத் தொகை ஒரு நபருக்கு அதிகபட்சமாக 25,000 ரூபாய் இப்போது வழங்கப்பட்டு வருகிறது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், குறிப்பாக தேசிய வங்கிகள் எல்லாம் தனி நபருக்கு கடன் வழங்க தற்போது மறுக்கிறது என்று தெரிவித்தார்கள். அது எந்த வங்கி, எந்தப் பயனாளிக்கு வழங்கவில்லை என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால், அதற்கான தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஊரகப் பகுதி, நகரப் பகுதிகளுக்கு அதிகமாக கடன் வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, அம்மா அவர்களுடைய திட்டம் 75 சதவீதம் மகளிர் குழுக்களுக்கும், 25 சதவீதம் தனி நபர் கடனாகவும் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த 25 சதவீதத்திற்குள்தான் நகரப் பகுதியானாலும் சரி, ஊரகப் பகுதியானாலும் சரி, அதற்குத்தான்





அந்தக் கடன் தொகை வழங்கப்பட வேண்டும் என்று உள்ளது. அந்தத் திட்டத்தில்தான் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**45—**

### பேருந்துகளில் கட்டணச் சலுகை

***7305—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யும் 60 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு சீனியர் சிட்டிசன் என்கிற அடிப்படையில் கட்டணச் சலுகை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும் 60 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு சீனியர் சிட்டிசன் என்ற அடிப்படையில் கட்டணச் சலுகை வழங்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயில்களிலும் விமானங்களிலும் சீனியர் சிட்டிசன்களுக்கு சலுகைகள் கொடுப்பதைப்போல, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்கும் குறிப்பாக, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் பெண்களுக்கு, 60 வயது நிரம்பியவர்களாக இருந்தால் அவர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யும்போது, கட்டணச் சலுகை வழங்க, தாயுள்ளம்

கொண்ட மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்களின் விதவை மனைவியர்களின் வாரிசுதாரர்கள், ஊனமுற்றோர்கள், கண் பார்வையற்றவர்கள், மொழிக் காவலர்கள், மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் புற்று நோயாளிகள், நாடகக் கலைஞர்கள், அரசினால் தெரிவு செய்யப்பட்ட பத்திரிகை நிருபர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற மற்றும் மேலவை உறுப்பினர்கள் போன்ற பல்வேறு வகைப்பட்டவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் பயணம் செய்ய பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை யாவும் அவ்வகைகளின் இன்றியமையாமையைக் கருத்தில்கொண்டு, சமூக நோக்கில் வழங்கப்படுகின்றன. இதைப்போன்ற சலுகைகளை மேலும் நீட்டித்து வழங்குவது என்பது இப்போதைய பேருந்து இயக்கச் செலவினங்களை கணக்கிட்டுப் பார்க்கும்போது, மேலும் இதுபோன்ற சலுகைகளை வழங்குவதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான், வேறு மாநிலங்களிலே இல்லாத அளவுக்கு, இவ்வளவு தூரம், அதுவும் சொல்லப்போனால், பல்வேறு வகைப்பட்டவர்களுக்கும் இலவசப் பயணச் சலுகைகளும், கட்டணச் சலுகை வசதிகளும் தமிழகத்திலேதான் இன்றைக்கும் அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இந்த வகையிலே நமது போக்குவரத்துக் கழகங்களுக்கு மட்டும் மாணவர்களுக்கு இலவசப் பயணச் சலுகை அளிப்பதன் மூலமாக இன்றைக்கு மொத்தம் 408.7 கோடி—408 கோடி ரூபாய்க்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஆண்டுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இதிலே அரசுக்கும் நிதி நெருக்கடி இருக்கும் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். எனவே அரசும் இன்றைக்கு முழுமையாக அதை ஈடு செய்ய முடியாமல், 95.9 கோடி ரூபாய்தான் அரசு இந்தத் தொகையை





ஈடு செய்திருக்கிறது. மீதியுள்ள 312.8 கோடி ரூபாயை இன்றைக்கு சமூக—social cause என்ற வகையிலே சமூகத்தினுடைய சேவை மனப்பான்மையிலே போக்குவரத்துக் கழகங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன. போக்குவரத்துக் கழகங்களுக்கும் நிதி நெருக்கடி; அரசுக்கும் நிதி நெருக்கடி. இப்படிப்பட்ட நிலையிலே மீண்டும் 60 வயதுக்கு மேற்பட்ட senior citizen என்ற முறையிலே அவர்களுக்கும் இலவச பயணச் சலுகை வழங்குவது என்பது நடைமுறையில் சாத்தியம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பேருந்துகளை வாங்க உத்தரவிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, நிதி நிலைமை சீரடைந்தவுடன் ஆதிதிராவிட ஏழை மாணவிகளுக்கு இலவச சைக்கிள் அம்மா அவர்களின் ஆட்சியில் வழங்கியதைப்போல, 60 வயது நிரம்பிய ஆதிதிராவிட பெண்களுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணச் சலுகை வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தாயுள்ளத்தோடு பரிசீலிக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் சொன்னேன். இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் இப்படிப்பட்ட கட்டணச் சலுகைகள் மிக அதிகமாக வழங்கிக்கொண்டிருக்கிறோம் என்று. இதை மேலும் மேலும் விரிவுபடுத்திக்கொண்டே வந்தால், வருங்காலத்திலே—ஒரு காலத்திலே போக்குவரத்துக் கழகங்கள் முழுமையாக இலவச பயணத்திற்கென்றே நடத்துகின்ற சூழ்நிலை உருவாகிவிடும். ஆகவே இந்தச் சலுகையை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு ஏற்க இயலாமல் இருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 வயதைத் தாண்டிய முதியவர்கள் என்பதைக் காட்டிலும், இன்றைக்கு அரசு சார்பிலே வயது வந்தோர், தங்களால் தங்களது வாழ்க்கையை

[2004 பிப்ரவரி 12

நடத்த முடியாத அளவிற்கு நலிந்திருக்கின்ற நிலையில் உள்ள ஆண்களுக்கும், அதேபோல பெண்கள் கணவனால் கைவிடப்பட்டவர்கள் போன்றவர்களுக்கு எல்லாம் அரசு ஓய்வூதியம் வழங்குகிறது. மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் வழங்குகிறது. அப்படிப்பட்ட ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்காவது அவர்கள் பேருந்திலே பயணம் செய்கின்ற நேரத்தில் இலவசமாகச் செல்லும் வகையில் அவர்களுடைய பயணச் செலவை ஏற்றுக்கொள்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விரிவாகச் சொல்லியிருக்கிறேன். ஏறத்தாழ சமுதாயத்தினுடைய பல்வேறு பகுதி மக்களுக்கு, குறிப்பாக, இலவசப் பயணம் யார் யாருக்குத் தேவைப்படுகிறதோ, அவர்களுக்கெல்லாம் பெரும்பாலும் வழங்கப்பட்டு வருகின்றன. இன்னும் சொல்லப்போனால், நான் ஏற்கெனவே சொன்னதுபோல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் இந்த அளவிற்கு இலவசப் பயணச் சலுகைகளை வழங்கிக்கொண்டிருக்கிறோம். ஆகவே நிதிநிலை இன்னமும் முழுமையாகச் சீரடையவில்லை என்பதால்—ஓரளவிற்கு சீரடைந்திருக்கிறதே தவிர, முழுமையாக இன்னமும் நிதி நிலைமை சீரடையவில்லை. போக்குவரத்துக் கழகங்களுக்கு இருக்கின்ற தற்போதைய நிதி நெருக்கடியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்க வாய்ப்பில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசால் மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச பஸ் பாஸ்களை தவற விட்டுவிட்டால், மீண்டும் அந்த மாணவர்களுக்குக் கொடுப்பதில்லை என அரசு முடிவெடுத்துள்ளது. மாணவர்கள் சிறியவர்களாக இருப்பதால், பஸ் பாஸைத் தவற விடுவதை ஒரு பெரிய காரணமாக எடுத்துக்கொள்ளாமல் அவர்களுடைய முகவரிகள் அலுவலகத்தில் இருக்கின்ற காரணத்தால், பதிவு செய்துள்ள மாணவர்களுக்கு—பஸ் பாஸை தவற விட்டாலும்—மீண்டும் அவர்களுக்கு பஸ் பாஸ் வழங்கப்பட வேண்டும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 140 கோடி ரூபாய் வரிச் சலுகைகள் வழங்கி இருக்கின்றார்கள். சிறிய மாணவர்கள் பஸ் பாஸைத் தவற



2004 பிப்ரவரி 12]

விடுவதை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல் அவர்களுக்கு மீண்டும் பாஸ் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமாக இருப்பதை அறிந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதுகுறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கையை உயர்த்தும்போது, கேட்கலாம் என்று எண்ணி இருந்த கேள்வியை அருமை அண்ணன் சந்தானம் அவர்கள் கேட்டுவிட்டதையே நானும் முன்மொழிகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருக்குச் சொன்ன பதிலையே இவருக்கும் சொல்லியாகிவிட்டது. திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைக்குச் செல்கின்ற தொழிலாளர்கள் ஒரு மாதத்திற்குண்டான பஸ் கட்டணத்தை ஒட்டுமொத்தமாகச் செலுத்துகின்றபோது, அதிலே ஏதேனும் கட்டணச் சலுகை தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற நிதிநெருக்கடியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்க வாய்ப்பில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பள்ளிப் பிள்ளைகளை இலவசமாக ஏற்றிவர அனுமதியை அரசு வழங்கியும், பல அரசு பஸ்களில், பல வழித்தடங்களில், கிராமங்களில், கூட்ரோடுகளில் நிற்கின்ற குழந்தைகளை ஏற்றிவராமல் பல அரசுப்

போக்குவரத்துக் கழக பஸ்கள் வேண்டுமென்றே நிற்காமல் வந்துகொண்டிருக்கிறார்கள் என்ற புகார் பல பகுதிகளில் வந்து கொண்டேயிருக்கிறது. ஆகவே அரசுப் போக்குவரத்துக் கழக பஸ்களில் இந்தப் பள்ளிப் பிள்ளைகளை கட்டாயமாக ஏற்றிவர வேண்டும் என்று அரசு உத்தரவிட முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பள்ளி மாணவர்களை கட்டாயமாக ஏற்றிவர வேண்டுமென்று அரசு உத்தரவு இருக்கிறது. அதை அமல்படுத்தாமல், ஓட்டுநர், நடத்துநர் யாராவது அப்படி பள்ளி மாணவர்களை ஏற்றாமல் வருவார்களேயானால், அதைக் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் அவர்கள்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எம். சீனிவேல்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ்கள் வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். விடுமுறை நாளில், சனிக்கிழமை அன்று பள்ளிகளை நடத்துகின்ற நேரத்தில், அந்த மாணவர்களிடம், மாணவிகளிடம் பஸ் கட்டணம் வசூல் செய்யப்படுவதாக அறிகின்றேன். அந்த சனிக்கிழமை, விடுமுறை நாளில் அந்தப் பள்ளி நடைபெறக்கூடிய நேரத்தில் வரக்கூடிய மாணவர்களுக்கு இலவச பஸ் கட்டணம் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கல்வித் துறையோடு இணைந்த கேள்வி. ஏனென்று சொன்னால், வேலை நாட்களிலேதான், பள்ளி நடைபெறுகின்ற நாட்களிலே மட்டும்தான் இலவச பஸ் பயணச் சலுகை வழங்க முடியும். ஆனால் சில நேரங்களிலே கல்வித் துறை அந்த சிறப்பு வகுப்புகளை விடுமுறை நாட்களிலும் நடத்துகிறார்கள். எந்தெந்த நாட்களிலே, விடுமுறை நாட்களிலே அவர்கள் சிறப்பு வகுப்பு நடத்துகிறார்கள் என்பது போக்குவரத்துக் கழகத்திற்குத் தெரிவதில்லை. ஆகவே இதுகுறித்து கல்வித் துறையோடு கலந்துபேசி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்யும், சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, பல வழித்தடங்களிலே பாதை சரியில்லை, கலெக்ஷன் சரியில்லை என்ற காரணங்களைக் காட்டி, பல்வேறு வழித் தடங்களிலே சென்றுவந்த போக்குவரத்துக் கழக பஸ்கள் பல வருடங்களாக நிறுத்தப்பட்ட நிலையில் உள்ளன. இதற்கு முன்னாலே பேசியபோதுகூட நான் இந்த அவையிலே இப்படிப்பட்ட வழித் தடங்களிலே மீண்டும் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெமினி கே. ராமசந்திரன் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். அரசு பஸ்களிலே குழந்தைகளை ஏற்றி வரவில்லை என்று சொன்னார்கள். அது உண்மையிலே நடைபெறுகிற ஒரு நிகழ்ச்சி. ஏனென்றால், முதலிலே வருகிறபோது ஓர் ஊரிலேயிருந்து பஸ் வருகிறது. வருகிறபோது அந்த ஊரிலே உள்ளவர்கள் நிறைய பேர் ஏறிக்கொள்கிறார்கள். அடுத்த ஊரிலே, அந்தப் பள்ளிக் கூடங்களுக்குச் செல்ல வேண்டிய குழந்தைகள் நின்றுகொண்டிருக்கிறார்கள். பஸ்ஸிலே இடமில்லை. அந்த ஊரிலேயிருந்து பள்ளிக்குப் போகிற குழந்தைகள் ஏறுவார்கள் என்கிற சூழ்நிலையைத் தெரிந்து, அந்தக் குழந்தைகளுக்கு அந்த இடத்தை ஒதுக்கி வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? அந்த இடம் காலியாக வருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரா பஸ் ஓட்டுவது? (சிரிப்பு) அமைச்சரை கண்டக்டர் வேலை பார்க்கச் சொல்கிறீர்களா? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவருடைய ஆலோசனை குறித்து அரசு சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி.

[2004 பிப்ரவரி 12

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, சனிக்கிழமை விடுமுறை நாட்களாக இருப்பதால், அது கல்வித் துறையோடு இணைந்து செயல்பட வேண்டிய நிலை இருக்கிற காரணத்தால் அது இயலாது என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற பள்ளி நாட்களிலே வெளி ஊரிலேயிருந்து வந்து, நகர்ப்புறத்திலே படிக்கின்ற மாணவர்கள், பள்ளிக்கூடம் முடித்த பிறகு, அருகிலே சென்று டியூஷன் படித்துவிட்டு, இரவு 7-00 மணி, 8-00 மணிக்குச் செல்கிறபோது, அந்த மாணவர்களை ஏற்றுவதற்கு அந்த நடத்துநர்கள் மறுக்கிறார்கள். ஆகையால் அவர்கள் டியூஷன் படித்துவிட்டு இரவு 8-00 மணிக்குச் செல்கின்றபோது, அந்த பஸ்ஸிலே அந்த இலவச பஸ் பாஸை அனுமதிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நான் ஏற்கெனவே சொல்லியிருந்தேன். வேலை நாட்களிலே, பள்ளி நடைபெறுகின்ற நாட்களிலே பள்ளி ஆரம்பிக்கின்ற, தொடங்குகின்ற நேரம் தெரியும்; பள்ளி முடிக்கின்ற நேரமும் தெரியும். அதை அனுசரித்து, அதை வைத்து இப்போது பேருந்துகள் அந்தந்தப் பள்ளி மாணவர்களுக்காக இயக்கப்படுகின்றன. அந்தப் பள்ளிகள் அவர்கள் வசதிப்படி, சில நேரங்களில் கூடுதல் நேரத்திற்கு, சிலர் சிறப்பு வகுப்புகள் நடத்துகிறார்கள். விடுமுறை நாட்களில் நடத்துகிறார்கள். சிலர் 5 மணி வரை நடத்துக்கிறார்கள், சில பள்ளிகள் 6 மணிக்கு வகுப்புகளை முடிக்கிறார்கள், சில பள்ளிகளில் 8 மணி வரை முடிக்கிறார்கள். இப்படிப்பட்ட செய்திகள் போக்குவரத்துத் துறைக்கு சரியாகத் தெரிவதில்லை. ஆகவே அந்தச் சூழ்நிலையில் போக்குவரத்துத் துறை, கல்வித் துறையோடு இணைந்து வரையறுத்து, கலந்து ஆலோசித்து அவர்களுடைய கோரிக்கைகளை, இதுபற்றிய நடைமுறைப் பிரச்சினைகளையெல்லாம் ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் அரசு பரிவுடன் சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.



2004 பிப்ரவரி 12]

**46—**

**மலரின வளர்ப்புப் பூங்கா**

**•23783—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மலரின வளர்ப்புத் தொழிலின் வளர்ச்சியை விரிவுபடுத்த டிட்கோ உதவியுடன் மலரின வளர்ப்பு அடிப்படை கட்டமைப்புப் பூங்கா ஒன்றை கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதியில் அமைத்திட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதியில் டிட்கோ உதவியுடன் மலரின வளர்ப்பு அடிப்படை கட்டடமைப்புப் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதியானது மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை ஒட்டியுள்ள பகுதியாகும். இங்குள்ள விவசாயிகள் பெரும்பாலும் தென்னை, கரும்பு விவசாயம் செய்து வருகின்றார்கள். கடந்த மூன்றாண்டுகளாக பருவ மழை பொய்த்ததன் காரணமாக பெரிதும் பாதித்து உள்ளார்கள். இங்குள்ள சீதோஷ்ண நிலைக்கேற்ப ஊட்டி, தருமபுரி மாவட்டங்கள் போல, மலரின வளர்ப்புத் தொழிலின் வளர்ச்சியை விரிவுபடுத்த டிட்கோ உதவியுடன் மலரின வளர்ப்பு அடிப்படை கட்டமைப்புப் பூங்கா ஒன்று அமைத்து, கொய்த்த மலர்கள் ஏற்றுமதியை நடப்பாண்டில் தொடங்க, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் ஓசூரில் 'டான்ஃப்புளாரா' உட்கட்டமைப்புப் பூங்கா நிறுவனம் என்ற பெயரில் சுமார் 50 ஹெக்டேர்

பரப்பில் மலர்ப் பூங்கா ஒன்றினை ரூ.24.85 கோடி திட்டச்செலவில் டிட்கோ நிறுவனம் கூட்டு முயற்சியில் அமைத்து வருகிறது. இப்பூங்காவில் 50 மலர் வளர்ப்புப் பிரிவுகளுக்குத் தேவையான முழுமையான உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படவுள்ளது. மத்திய செய் முறை இல்லம் கட்டப்பட்டு வருகிறது. இதில் உள்ள இடம் நீண்ட கால குத்தகை அடிப்படையில் மலரின வளர்ப்பு குத்தகைதாரர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இப்பூங்கா 2003-2004 ஆம் ஆண்டில் இயங்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் வெற்றியுடன் செயலாக்கப்பட்ட பின்னர், இதுபோன்ற பூங்காக்களை மற்ற இடங்களில் அமைக்க, சந்தை நிலவரம் மற்றும் அவ்விடங்களில் உள்ள தட்பவெட்ப நிலைகளை அறிந்து, தகுதி வாய்ந்த தொழில் முனைவோர்கள் மூலமாக ஆவன செய்யலாம் என டிட்கோ நிறுவனம் கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, திரு. அ. நடராஜன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**47—**

### கால்நடை மருத்துவமனை

**•10405—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், அன்னியூர் ஊராட்சி, ஆய்ந்தாக்கம் கிராமத்திற்கு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலம் பகுதியிலே கடந்த வருடம் கால்நடைகளை கோமாரி நோய் தாக்கிய நேரத்தில் போர்க்கால நடவடிக்கையாக போதிய மருந்துகளுடன் மருத்துவக் குழுவை அனுப்பி 5000-க்கும் மேற்பட்ட கால்நடைகளை காப்பாற்றிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் உயிர்நாடியான கால்நடைகள்மீது அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 72 கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தியதுபோல, வரும் நிதி ஆண்டிலாவது அன்னியூரில் கால்நடை மருந்தகம் அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆய்ந்தாக்கம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் ஏற்படுத்துவது பற்றி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை இம்மாமன்றத்திற்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளின் நலன் கருதி குத்தாலம் ஒன்றியம் திருவாவடுதுறையிலும், குடவாசல் ஒன்றியம் ஆலத்தூரிலும், கால்நடை பார்வை நிலையமும் 8 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு கால்நடை நிலையமே இல்லாத 18 புதுக்குடி கிராமத்தில் துணை நிலையமும் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதுகுறித்தும் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவமனை இல்லாத பகுதிகளில், ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருந்துவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு தற்போது போதுமான பணிகள் கிடையாது. அவர்களை வைத்து, நடமாடும் மருத்துவமனையாக, கால்நடை மருத்துவமனை இல்லாத பகுதிகளில் நடமாடும் மருத்துவமனையை உருவாக்க, அந்த

[2004 பிப்ரவரி 12

ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய கால்நடை மருத்துவர்களைப் பயன்படுத்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி நல்ல கேள்விதான். ஆகவே அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து வருகிறது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 48 மற்றும் 49, தள்ளிவைக்கப்படுகிறது.*

*வினா எண் 50, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

**50—**

**தொகுதிகளின் மறுவரையறை**

**•35352—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

*மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருத்தாசலம் தாலுகா, விருத்தாசலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட 20 ஊராட்சி மன்றங்களைத் திரும்பவும் விருத்தாசலம் தொகுதியிலேயே சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) 2003 ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 87-வது சட்டத்திருத்தத்தின்படி, ஒவ்வொரு மாநிலத்திலுள்ள மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகளை 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மாற்றி மறுவரையறை செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.*



2004 பிப்ரவரி 12]

*சட்டமன்றத் தொகுதிகளின் மறுவரையறை செய்யும் அதிகாரம், எல்லை மறுவரையறை ஆணையத்தின் வரம்பிற்குட்பட்டது. இதுகுறித்து, அரசு சார்பில் பரிந்துரைகள் செய்ய இயலாது. ஆனாலுங்கூட, அலுவல்சாரா உறுப்பினரான தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் மூலமாகவும், ஒருங்கிணைப்பு உறுப்பினர்களான மக்களவை சட்டமன்றப் பிரதிநிதிகள் மூலமாகவும் இந்தப் பரிந்துரையை மேற்கொள்ளலாம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 51, திரு. என்.ஆர். ரங்கராஜன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

185090

**51—**

**துணை மின் நிலையம்**

**•31628—திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

*மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பட்டுக்கோட்டை தொகுதி, கரம்பயத்தில் 230 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) பட்டுக்கோட்டை தொகுதி, கரம்பயத்தில் 230 கி.வோ. துணை மின் நிலையம் நிறுவுவதற்கான கருத்துரு தற்போது வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. நிறுவுவதற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.*

*(ஆ) மின் வாரியத்தின் ஒப்புதல் வழங்கப்பட்ட பின், தமிழ்நாடு மின்சார வாரியம் மேல் நடவடிக்கை எடுக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 52, திரு. வி. ஜெயராமன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

**52—**

## துணை மின் நிலையம்

***41280—திரு. வி. ஜெயராமன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி, ஆனைமலை ஒன்றியம், திவான்சாபுதூர், சக்திசோயா பூச்சனாரி கிராமத்தின் அருகில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொள்ளாச்சி, ஆனைமலை ஒன்றியம், திவான்சாபுதூர், சக்திசோயா பூச்சனாரி கிராமத்தின் அருகில் உள்ள மரிச்சநாயக்கன் பாளையம் கிராமத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளது.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐம்பது ஆண்டுகால கோரிக்கையினை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அந்தத் திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றித் தருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, மின்சார வாரியத்தினுடைய அறிக்கையைப் பெற்று அந்தத் துணை மின் நிலையம் அமைக்கும்பொருட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, தங்குதடையில்லாத மின்சாரத்தை வழங்க வேண்டும் என்கின்ற முனைப்போடு முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு





வருகின்றார்கள். Accelerated Power Development Reforms Programme மூலமாக T & D losses—Transmission & Distribution losses என்று சொல்லும்போது, அகில இந்திய ரீதியில் 16 சதவீதம் நாம் உள்ளோம். பிற மாநிலங்களில் 30 சதவிகிதம், 40 சதவிகிதம் என்ற அளவிற்குக்கூட இருக்கின்ற நிலையில், அதைக்கூட குறைக்க வேண்டும் என்கின்ற ஒரு முனைப்போடு, மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். அந்த அடிப்படையிலே இந்த ஆண்டு A.P.D.R.P. திட்டத்தின் மூலம் Accelerated Power Development Reforms Programme மூலம் 977 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும். மின்திறன் மாற்றியின் திறன் அதிகரிக்கப்படும். கூடுதல் விநியோகம் மின் மாற்றிகள் நிறுவப்படும். தற்போதுள்ள மின் பாதைகளும், மின் கட்டமைப்புகளும் மேம்படுத்தப்படும். மின் நிலையங்களில் தாழ்வழுத்த மின் இணைப்புகளுக்கான மின் கட்டணப் பட்டியல் கணினிமயமாக்கப்படும். விநியோக மின் மாற்றிகளில் குறைந்த மின்னழுத்த மின் தேக்கிகள் நிறுவப்படும். துணை மின் நிலையங்களில் உயர் மின் அழுத்த மின் தேக்கிகள் நிறுவப்படும். எனவே இப்படி நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் 16-லிருந்து 2 சதவிகிதம் அளவிற்கு Transmission & Distribution losses-ஐக் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

சென்னையைப் பொறுத்தவரையிலே, இந்த 977 கோடி ரூபாயில் 441 கோடி ரூபாய் அளவில் இந்தத் திட்டத்தின் மூலம் செயல்படுத்த இருக்கின்றோம். இதுவரையிலே 194 கோடி ரூபாய் அளவிற்கு, சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, தங்குதடையில்லாத மின்சாரம் வழங்க வேண்டும் என்கின்ற முனைப்போடு செயல்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும், இன்னொரு தகவலாக, முந்தைய ஆட்சியிலே எந்த அளவுக்கு மோசமான நிருவாகம் இருந்து இவற்றிலெல்லாம் கவனம் செலுத்தப்படவில்லை என்பதற்கு உதாரணம், 1996-2001 ஆம் ஆண்டு, முந்தைய தி.மு.க. ஆட்சி காலத்திலே, துணை மின் நிலையங்கள், ஐந்தாண்டு காலத்தில் மொத்தம் அமைக்கப்பட்டது 174. ஆனால் நம்முடைய ஒரு போர்க்கால அரசு எதையும் விரைந்து செயல்படுத்துகின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் 152 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தகவலுக்காகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2004 பிப்ரவரி 12

*முற்பகல் 10-40*

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநில எல்லையிலே அமைந்து இருக்கின்ற இந்தப் பகுதியிலே இவ்வளவு விரைவாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு துணை மின் நிலையத்தை இந்த ஆண்டே அமைத்துக் கொடுப்பதற்கான உத்தரவுகளை வழங்கியதற்கு நன்றியினைத் தெரிவித்து, கடுமையான வறட்சி நிலவுகிற நேரத்திலே விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்று, இந்த நல்ல பணியைச் செய்து கொடுத்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியினை பணிவோடு உரித்தாக்கி விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே, குறிப்பாக சென்னை மாவட்டத்திலே தடையில்லா மின்சாரத்தை வழங்க டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிற நடவடிக்கைகளை இன்றைக்கு சென்னை மாநகரத்து மக்கள் வெகுவாகப் பாராட்டி வருகின்றார்கள். ஒரு சில இடங்களில், துணை மின் நிலையங்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திலே அனுமதி கிடைத்த பிறகுகூட அந்த இடத்தைப் பெறுவதற்கு காலதாமதம் ஏற்படுகின்ற ஒரு நிலை இருக்கின்றது. ஆகவே இப்படி துணை மின் நிலையங்கள் அனுமதிக்கப்பட்டு இடங்கள் கிடைப்பதற்கு காலதாமதம் ஆகின்ற துணை மின் நிலையங்களை கணக்கில் எடுத்து, அதற்கு ஒரு குழுவினை அமைத்து விரைவாக இடம் கிடைத்து, அந்த இடங்களிலே துணை மின் நிலையங்கள் அமைக்கப்பெற அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படுவது குறித்தும் சென்னை மாநகராட்சியினுடைய நிலத்திற்கு உட்பட்ட பகுதியிலே அமைக்கப்பட வேண்டுமென்றும் சொன்னார்கள். சென்னை மாநகரத்தினுடைய வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆய்வு செய்தபோது இந்தக் கருத்து கொணரப்பட்டபோது, இதுசம்பந்தமாக இதற்கு



2004 பிப்ரவரி 12]

உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற அறிவுரை வழங்கப்பட்டது. எனவே அந்த அறிவுரையின்படி நிச்சயமாக நம்முடைய சென்னை மாநகராட்சியினுடைய நிலம் உடமை உரிமை மாற்றம் மின் வாரியத்திற்கு செய்யும் பட்சத்தில் இதை உடனடியாக நிறைவேற்றலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். எனவே இதை ஒரு குழுவாக அமைத்து அதாவது ஒரு land transfer செய்வது ஒரு பெரிய procedure-ஆக இருப்பதன் காரணமாக, அதனை simplify பண்ணுவதற்கு ஏதுவாக atleast ஒரு enter upon permission கொடுப்பதற்கு ஒரு வழிவகையாக ஏதாவது செய்ய முடியுமா என்பது குறித்து ஆராயப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தொகுதிக்கு 30 கோடி ரூபாயில் 5 துணை மின் நிலையங்கள் அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே அனுமதி தந்து இருக்கிறார்கள். அதற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றில் இரண்டு துணை மின் நிலையங்களினுடைய பணி முடிவுற்றுவிட்டது. மீதியுள்ள துணை மின் நிலையங்களுக்கு இடம் தேர்வு செய்வதிலே காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதற்கு அருகில் அறநிலையத் துறையைச் சேர்ந்த இடங்கள் இருக்கின்றன. மின் வாரியத்தினுடைய அதிகாரிகள் அந்த இடத்திற்காக அலைகின்றபோது காலதாமதம் ஏற்படுகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் செயலாளர் அவர்களையும், அறநிலையத் துறையினுடைய செயலாளர் அவர்களையும் நேரடியாகப் பேச வைத்து, அந்த இடங்களைத் தேர்வு செய்து கொடுப்பதில் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று கேட்டு, மேலும், கோவை மாவட்டத்திலே இரண்டு S.E. அலுவலகங்கள் இருக்கின்றன. திருப்பூர் ஒரு மிகப் பெரிய பகுதி. மாதம் ஒன்றிற்கு சுமார் பத்து கோடி ரூபாய்க்கு மேலே மின் கட்டணம் மட்டும் வசூல் ஆகின்றது. எனவே கோவையிலே இருக்கின்ற அந்த S.E. அலுவலகத்தை திருப்பூருக்கு மாற்றித் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் ஏற்கெனவே இரண்டு துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்படுவதாக இங்கு தெரிவித்தார்கள். மிக்க மகிழ்ச்சி. அதைப் போன்று விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சில நேரங்களில் இடங்கள் கிடைப்பது தாமதமாகின்ற பட்சத்திலே, அங்கே துணை மின் நிலையம் அமைக்கப்படுவதில் தாமதமாக செயல்பட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட சம்பந்தப்பட்ட துறைகளுக்குச் சென்று இதை extension work-ஆகச் செய்தால் நிச்சயமாக அவர்களும் மின்வாரியத்திற்கு உதவி செய்ததாகக் கருதப்படுவார்கள். எனவே எங்களுடைய பணி அரசு அளவில், அரசுத் துறையினுடைய சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளை அழைத்து இதனைத் தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நிச்சயமாக எடுக்கின்றோம். இந்த ஆண்டே கிட்டத்தட்ட 60 துணை மின் நிலையங்கள் 192 கோடியே 39 இலட்சம் ரூபாயில் அமைக்கப்படும். மேலும், Transmission and Distribution Programme என்ற அந்தத் திட்டத்தின்கீழ் 427 கோடி ரூபாயில் 97 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, எங்கெல்லாம் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமோ, அங்கெல்லாம் நிலத்தோடு கொடுக்கப்படுமானால், அங்கே அந்த நிலம் இருக்கின்ற பட்சத்திலே அவர்களுக்கு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதிலே இன்னொரு சிக்கல் என்னவென்றால், அங்கே ஆய்வு செய்துதான் கொடுக்கப்படும். ஏனென்றால், இது மற்ற hospitals போன்றவற்றுக்கு செய்வது போல் செய்ய முடியாது. எங்கெங்கு தேவையிருக்கிறதோ அங்கேயெல்லாம் செய்து கொடுப்பதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 53, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.



**53—**

## அர்ச்சகர்களுக்கு வீடு கட்டுதல்

***33108—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களுக்கு அரசு சார்பில் வீடு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பட்டியலைச் சேர்ந்த திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களில் சொந்த வீடு மற்றும் திருக்கோயில் குடியிருப்பு வசதி இல்லாத 6 அர்ச்சகர்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் மூலம் வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டு தற்சமயம் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடு கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, 2 அர்ச்சகர்களுக்கு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன என்பதை தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களில் பக்தர்களுக்கு அன்னதானம், ஏழை ஜோடிகளுக்கு இலவசத் திருமணம் என இந்து சமய அறநிலையத் துறை மூலமாக பல புரட்சிகர சாதனைகளைப் புரிந்துவரும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும், கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய சாதகமான பதிலுக்கு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய மாவட்ட மக்களுடைய சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, புதுக்கோட்டை மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய ஆலயங்களிலே பணிபுரியக்கூடிய அனைத்து அர்ச்சகர்களுக்கும் இதுவரை எத்தனை வீடுகள் கட்டிக்

[2004 பிப்ரவரி 12

கொடுக்கப்பட்டு இருக்கின்றன? இனி வருங்காலத்தில், பணிபுரிந்துகொண்டிருக்கக்கூடிய அனைத்து அர்ச்சகர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு வீடு கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 45 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. 33 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இத்திட்டத்திற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் போதுமான நிதி இல்லாத நிலையில் பணிகள் தடைபட்டுள்ளன. இத்திட்டத்திற்காக கூடுதல் நிதி பெற்று இப்பணிகளை விரைவில் நிறைவு செய்யும்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாவட்டத்தில் 2 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. 4 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. தேனி மாவட்டத்தில் ஒரு வீடு கட்டப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் 15 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. கரூர் மாவட்டத்தில் 2 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. கடலூர் மாவட்டத்தில் 26 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் 24 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரையில் 45 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 33 வீடுகள் அர்ச்சகர்களுக்காக கட்டப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 54, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்.

**கலைக் கல்லூரி**

***23536—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 பிப்ரவரி 12]

(அ) அவினாசி தொகுதியில் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தேவையின் அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவக்கும். தற்போதுள்ள நிதி நெருக்கடியில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களால் துவக்க இயலாது. எனவே அவினாசி தொகுதியில் கலைக் கல்லூரியை அரசால் அமைக்க இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெஞ்சம் கொண்டு விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் கல்விக்கு அதிக அளவு முக்கியத்துவம் கொடுக்கப்படும் நிலையில் அவினாசியில் அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும்கூட அரசு நிதி உதவியோடு தனியார் கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் aided Colleges பற்றிக் குறிப்பிடுகிறார் என்று நான் கருதுகிறேன். நிதி தாராளமாக இருந்தால் நிதியை தனியாருக்குக் கொடுத்து கல்லூரிகள் ஆரம்பிப்பதைவிட, அரசே ஆரம்பித்துக்கொள்ளலாம். ஆனால் இப்பொழுது அந்த நிலை இல்லை. இப்பொழுது தமிழ்நாட்டில் மட்டும் 162 அரசு உதவி பெறும் கல்லூரிகள் இருக்கின்றன. அந்த 162 அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கு மட்டும் Grant-in-Aid என்ற வகையில் ஆண்டுக்கு ரூபாய் 290 கோடியை அரசு மானியமாக வழங்கி வருகிறது. இதுவே அரசுக்குக் கூடுதலான செலவாக இருக்கின்றது. எனவே அரசு உதவி பெறும் கல்லூரிகள் துவக்குவதற்கு வாய்ப்பு இல்லை. இருந்தாலும் அரசின் நிதி உதவி

இன்றி சுய நிதிக் கல்லூரிகளைத் திறப்பதற்கு தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் எதுவும் பெறப்பட்டால், இதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

*முற்பகல் 10-50*

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரிகளில், தற்போது காலியிடமாக உள்ள விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அரசுக் கல்லூரிகளில் காலியாக இருக்கிற விரிவுரையாளர்களின் பணியிடங்களை நிரப்புவதற்கு தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன் பேரில், 750 விரிவுரையாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 55, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**55—**

## தொடக்க கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம்

***32877—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, இளம்புவனம் தொடக்க கூட்டுறவு வங்கிக்கு நில ஆர்ஜிதம் செய்து, கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 56, திரு. ப. அரசன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**56—**

## மரம் வளர்த்தல்

***39264—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தரிசு நிலங்களில் மரம் வளர்க்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட பத்து மாவட்டங்களில், சுமார் 3100 ஹெக்டேர் பரப்பளவில், வேம்பு, வாகை, புளியம், புங்கை போன்ற தகுதி வாய்ந்த 22 இலட்சம் மரக்கன்றுகள் குளக்கரையில் நடவு செய்ய, ரூ.3.5 கோடி அனுமதிக்கப்பட்டு, 2003-2004—ல் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு இயக்கம் என்ற பெயரில், சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகளைத் தங்களது சொந்தச் செலவில் நட்டு, அவற்றிற்கு நீர் ஊற்றி பராமரித்து வருகிறார்கள். அவர்களை ஊக்குவிக்கின்ற விதமாக நமது அரசு அவர்களுக்கு ஏதேனும் ஒரு விருது வழங்குகின்ற வகையில் அவர்களை கௌரவிக்கின்ற விதத்தில் ஏற்பாடு செய்யுமா? அதன்மூலம் தனியார்

மரம் வளர்ப்பதை ஊக்குவிக்கின்ற விதத்தில் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு சிந்திக்கும். தனியார் மரம் வளர்ப்பதற்கு, அவர்களுக்கு ஆலோசனைகளையும் வழங்குவதற்கு வனத் துறை தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 57, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**57—**

### பால் உற்பத்தியாளர் மையம்

**•31632—திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் மையத்தைப் பிரித்து, தூத்துக்குடி மாவட்டத்திற்கென்று தனியாக பால் உற்பத்தியாளர் மையம் உருவாக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் மையத்தைப் பிரித்து, தூத்துக்குடி மாவட்டத்திற்கென்று தனியாக பால் உற்பத்தியாளர் மையம் உருவாக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை கோடி தொண்டர்களின் ஒளி விளக்காகவும், ஆறு கோடி தொண்டர்களின் அற்புத அன்னையாகவும், பெற்றோர்களை இழந்து தவிப்பவர்களுக்குப் பிதாவாகவும், 100 கோடி இந்திய மக்களின்





எதிர்பார்ப்பாகவும், இமைமூடாது இயங்கி வருகின்றவரும், எங்களை எல்லாம் இயக்குகின்றவரும், பவனி போற்றும் தங்கத் தலைவி, கழகத்தின் காவல் தெய்வம், 'இல்லை' என்ற சொல்லை, அகராதியிலிருந்து நீக்கியவரும், முதலமைச்சர்களுக்கெல்லாம் முதலமைச்சராகிய எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தமிழ்நாட்டு முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி சமர்ப்பிக்கிறேன் தாயே!

ஆற்றுப் பாசனமோ, கால்வாய்ப் பாசனமோ இன்றி, கால்நடை வளர்ப்பதையே பிரதானத் தொழிலாகக் கொண்டு பிழைப்பு நடத்தும் விளாத்திகுளம் தொகுதி மக்களின் இன்றியமையாத தொழில் பால் உற்பத்தியாகும். அந்தப் பால் உற்பத்தியின் வாயிலாக கறவை மாடுகள் மூலம் கறக்கப்படும் பாலினை திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் மையத்திற்கு அளித்து வருகின்றனர். மிகவும் அதிக தூரமுள்ள மையத்திற்குச் செல்வதில் சில நேரங்களில், குறிப்பிட்ட நேரத்தில் செல்ல தடங்கல் ஏற்பட்டால், பால் திருப்பி அனுப்பப்படுகிறது. இதனால் பயனாளிகள் இழப்புக்குள்ளாகிறார்கள். இதனால் ஏற்படும் இழப்பைச் சரிசெய்யும் வகையில், தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், எனது தொகுதியான விளாத்திகுளம் தொகுதியில், அந்த மாவட்டத்திற்கென்று ஒரு தனி மையம் அமைத்துத் தர மாண்புமிகு தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம், இலாபகரமாகச் செயல்பட வேண்டுமென்றால் நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பால் தேவைப்படும். ஆனால் தூத்துக்குடி மாவட்டத்தில், நாள் ஒன்றுக்கு, 30,250 லிட்டர் பால் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. புதிதாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைக்க, ரூ.5 கோடி தேவைப்படும். இதற்குண்டான நிதி வசதி இல்லை. தூத்துக்குடி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைக்க, தேவையான சொந்த நிலம் அந்த ஒன்றியத்திற்கு ஏதுமில்லை. தூத்துக்குடி நகரம், சிறந்த பால் விற்பனை மையமாக மட்டுமே செயல்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய இரு மாவட்டங்களுக்கும் பொதுவாகச்

[2004 பிப்ரவரி 12

செயல்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தை இரு மாவட்ட ஒன்றியங்களாகப் பிரித்துச் செயல்படுத்தும்போது, உற்பத்தி ஓரிடம், விற்பனை ஓரிடம் என்ற நிலை உருவாக வாய்ப்பு இருக்கிறது. அதிக நிர்வாகச் செலவினங்கள் காரணமாகவும் இரு ஒன்றியங்களும் நஷ்டத்தில் செயல்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும். எனவே தூத்துக்குடி மாவட்டத்திற்கென தனியாக ஒரு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைக்க போதிய வாய்ப்புகள் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சிவபெருமாள்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம், விளாத்திகுளம் ஆகிய பகுதிகளிலே எந்தவிதமான தொழிற்சாலையும் கிடையாது. அங்குள்ள மக்கள் விவசாயத்தையே பெரும் தொழிலாக நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக அங்கு மழை பொய்த்துவிட்ட காரணத்தினால், அங்குள்ள மக்கள் வீட்டிற்கு 2 மாடுகள், 3 மாடுகளை வைத்து பால் கறக்கும் தொழிலையே தங்களுடைய தொழிலாகச் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகையினால் தூத்துக்குடி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தோடு ஒன்றுபட்ட மாவட்டமாக இருந்த காலகட்டத்திலே, திருநெல்வேலி மாவட்டத்திலே ஒரு கூட்டுறவு மையம் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்று அந்தப் பகுதியிலே நெடுஞ்சாலைத் துறை அருகே அமைந்துள்ள கயத்தாறு பகுதியிலே அதிகமான பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆகையினாலே கயத்தாறு பகுதியிலே ஒரு மத்திய கூட்டுறவு பால் உற்பத்தி மையம் அமைக்க அரசு ஆணையிடுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிடுகிற கயத்தாறு பகுதியில் அதிகமான பால் வரக்கூடிய வாய்ப்பு இருக்குமானால், அங்கே ஒரு Bulk Cooler--மொத்த பால் குளிர்வு இயந்திரம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். ராஜம்மாள்.



2004 பிப்ரவரி 12]

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வாயினாலேயே தூத்துக்குடியில் அதிகமான பால் விற்பனை ஆகிறது என்று சொல்கிறார். அப்படி இருக்கும்போது, திருநெல்வேலி போவதற்குள் பால் கெட்டுவிடும் என்பதால், தூத்துக்குடி மாவட்டத்திலே தூத்துக்குடியைச் சுற்றியுள்ள கிராமத்திலோ அல்லது தூத்துக்குடியிலோ அந்த மையம் அமைக்க ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே கூட்டுறவு பால் ஒன்றியம் அமைப்பதற்கு உண்டான வாய்ப்புகள் இல்லை என்பதற்கான காரணங்களை ஏற்கெனவே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறேன். பால் விற்பனை அதிகமாக நடக்கிறது. ஆனால் உற்பத்தி எவ்வளவு இருந்தாலும், இப்போது அங்கே இருக்கிற பால் குளிரூட்டும் நிலைய வசதி, பால்பண்ணை வசதி போதுமானதாக இருக்கிற காரணத்தினால் இன்னொரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அங்கே அவசியம் இல்லை என்ற காரணத்தினால், அதற்கான முயற்சிகள் மேற்கொள்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 58, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**58—**

### சுற்றுலா மையங்கள்

***20372—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கயத்தாறு மற்றும் கழுகுமலையில் சுற்றுலா மையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி கயத்தாறு மற்றும் கழுகுமலையில் சுற்றுலா மையங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை கருத்திற்கொண்டு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதத்தின் வழிகாட்டியே, ஒன்றுபட்ட தமிழகத்தின் ஒளி விளக்கே, சாதாரண தொண்டனையும் உயர்ந்த இடத்தில் வைத்து அழகு பார்க்கும் எங்கள் அன்னையே, பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் அன்னையே, எங்களின் அசைவுக்கு காலக் கடிகாரமாக விளங்கும் அன்னையே, சுதந்திர இந்தியாவில் சுதந்திர வேட்கையினை உலகிற்கு உணர்த்திய உத்தமத் தியாகிகள் தோன்றி, தங்களின் இன்னுயிரை நீத்த ஒட்டப்பிடாரம் தொகுதியிலே வீரபாண்டிய கட்டபொம்மனை காட்டிக்கொடுத்து தூக்கிலிடப்பட்ட கயத்தாறிலே கட்டபொம்மன் வழிபட்ட அகிலாண்ட ஈஸ்வரி அம்மன் கோயில் உள்ளது. அந்தக் கோயிலையும், கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட அந்த இடத்தையும் சேர்த்து ஒரு சுற்றுலாத் தலமாக அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். அதோடு, குடவறை கோயிலான கழுகுமலை சுற்றுலா மையமாக மாற்றப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதற்கு எங்கள் தொகுதி மக்களின் சார்பாக அன்பு கலந்த நன்றியை காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன். இந்திய அரசு கிராமிய சுற்றுலாத் தலமாக தமிழகத்திலே கழுகுமலையைத் தேர்வு செய்து ரூ.2.5 கோடியினை ஒதுக்கீடு செய்ததாக அறிகிறேன்; அதை உடனடியாக பெற்றுத் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலையில் பேருந்துகள் நிறுத்தும் இடம், மலைப் பகுதியில் மரம் நடுதல், சாலை மேம்பாடு, விளக்கு வசதி, சாலையோர வசதி, நினைவிடங்கள் புனரமைப்பு செய்ய ரூ.48.68 இலட்சம் செலவில் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதித்துள்ளார்கள். தூத்துக்குடி மாவட்டத்தின் சுற்றுலா சிறப்பியல்புகளை பயணிகளுக்கு எடுத்துரைக்க திருநெல்வேலியில் சுற்றுலா அலுவலகம் ஒன்றும், பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் நினைவுக் கோட்டையில் சுற்றுலாத் தகவல் மையம் ஒன்றும் இயங்கி வருகிறது. பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் நினைவுக் கோட்டையில் சுற்றுலாத் துறையின் மூலம் ஆண்டுதோறும் கட்டபொம்மன் நினைவு விழா நடத்தப்பட்டு வருகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி சி. கனகதாரா.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடித்தளத்து மக்களைக் காத்து, அறிவியல் தமிழை வளர்த்து, வான்மழை போற்றும் தேசிய தலைவியாம் மாண்புமிகு அம்மாவின் பொற்கால ஆட்சியிலே என்னுடைய பேரணாம்பட்டு தொகுதியிலே அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஒன்று இருக்கிறது. அதன் அருகில் ஊட்டல்மலை என்ற ஒன்று இருக்கிறது. அதில்...(மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி சி. கனகதாரா, தனியாகக் கேள்வி போடுங்கள்.

**செல்வி சி. கனகதாரா:** சுற்றுலா சம்பந்தமானதுதான். அதிகமான கோரிக்கைகள் வந்திருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத் தனியாக கேள்வி போடுங்கள். இது ஒட்டப்பிடாரம், கழுகுமலை.

**செல்வி சி. கனகதாரா:** முக்கியமான ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 59, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**59—**

## சுற்றுலா மையம்

***37037—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், வடலூர் பேரூராட்சியைச் சேர்ந்த சுத்த சன்மார்க்க அருட்பெருஞ்ஜோதி இராமலிங்க அடிகளார் நிலையத்தினை அரசு தனது பொறுப்பில் எடுத்து சுற்றுலா மையமாக அறிவித்து இதனைக் காத்திட நடவடிக்கை எடுக்க இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், வடலூர் பேரூராட்சியைச் சேர்ந்த சுத்த சன்மார்க்க அருட்பெருஞ்ஜோதி இராமலிங்க அடிகளார் நிலையத்தினை அரசு தனது பொறுப்பில் எடுத்து சுற்றுலா மையமாக அறிவித்து அதைக் காத்திட நடவடிக்கை எடுக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 60, திரு. ஜே. ஹேமச்சந்திரன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

**60—**

## விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

***19085—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதல் தளம் ரூ. 60.00 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டதா?





(ஆ) அதற்கு முறையான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதா?

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதல் தளத்தில் ரூ.38.37 இலட்சம் செலவில் ஆணைய அலுவலகம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. முறையான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சக்திவேல் முருகன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர்களுடைய பொற்காலம் எதுவென்று சொன்னால், அது நம்முடைய புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சி வரும்போதுதான் விளையாட்டு வீரர்களுக்கு எல்லாம் பொற்காலமாக எப்போதும் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அதைப்போலத்தான் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில்கூட மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 2004-2005 ஆம் ஆண்டிற்கு ரூ.48.14 கோடியை இதுவரை எந்த ஒரு அரசும் ஒதுக்கிடாத அளவில் மிகப் பெரிய ஓர் ஒதுக்கீட்டைச் செய்துள்ளார்கள். அதிலே ஓர் அற்புதமான அறிவிப்பாக உடற்பயிற்சிக் கல்வி விளையாட்டுக்கு என்று தனி ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை பணிவோடு வேண்டுவது என்னவென்று சொன்னால், கபடி என்று சொன்னாலும், ஹாக்கி என்று சொன்னாலும், கால்பந்து என்று சொன்னாலும், இன்று தமிழ்நாட்டிலுள்ள அத்தனை விளையாட்டு வீரர்களும் இடம்பெறுகின்ற பட்டியலைப் பார்த்தோம் என்று சொன்னால், நூற்றுக்கு 90 சதவிகிதம் தென் மாவட்டங்களில் உள்ளவர்கள்தான் அதில் இடம் பெறுகிறார்கள். எனவே கபடிக்குத் தந்தையாகவும், ஹாக்கிக்குத் தந்தையாகவும், கால்பந்துக்குத் தந்தையாகவும் விளங்குகின்ற தென் மாவட்டத்திற்கு, அந்தப் பல்கலைக்கழகத்தை தென் மாவட்டத்திலுள்ள திருநெல்வேலியில், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு ஏற்படுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இடம் தேர்வு செய்யப்படும், பல்கலைக் கழகம் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் விளையாட்டை ஊக்குவிக்கின்ற வகையில், விளையாட்டு வீராங்கனைகளுக்கு நல்ல பரிசுகளைக் கொடுத்தும், அவர்களுக்கு வீட்டு வசதிகளைக் கொடுத்தும் ஆணையத்தை அமைத்திருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இதேபோல விளையாட்டை ஊக்குவிக்கின்ற வகையிலே ஒரு விளையாட்டு ஆணையத்தை அமைக்கின்ற செயற்குறிப்பு அரசினுடைய ஆய்வில் இருக்கிறதா என்பதை உங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நெருக்கடி காரணமாக அப்படி எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் விளையாட்டை ஊக்குவிப்பதற்காக ஒரு ஸ்டேடியம் கட்டுகின்ற பணி தொடங்கியது. அந்தப் பணி தற்காலிகமாக சில தடைகளின் காரணமாக நிறுத்தப்பட்டு இருக்கின்றது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, விரைவிலே அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோயம்புத்தூரில் ஒரு ஸ்டேடியம் இயங்கி வருகிறது. திருப்பூரில் தனியாக அமைப்பதற்கு நிதி நெருக்கடி கருதி வாய்ப்பு இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், ஓங்கி அடித்துவிடாமல் கோரிக்கை வந்தால் பரிசீலனை பண்ணுங்கள். (சிரிப்பு) திருமதி ராஜம்மாள்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தூத்துக்குடி மாவட்டத்திலே, தூத்துக்குடி தொகுதியிலே பிறந்த ஒரு மாணவன் காமராஜ் என்பவர், விளையாட்டிலே, உலகத்திலேயே இரண்டாவது பரிசு பெற்று வந்து இருக்கிறார். அவர் ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவர். அமைச்சர் அவர்களிடம் சலுகை கேட்டு அந்த மனு வந்தபோது அவர் வேறு மாநிலத்தின் மூலமாகப் போனதனால், அவருக்கு நமது அம்மா அவர்கள் கொடுக்கும் சலுகைகள் கிடைக்காது என்று சொன்னதாக என்னிடம் வந்து சொன்னார்கள். அம்மா அவர்களிடம் சொல்லி அதை மறுபரிசீலனை பண்ணி அந்த ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரரான, காமராஜ் என்ற மாணவனுடைய குடும்பத்தைக் காப்பாற்ற அம்மா அவர்கள் ஏதாவது வழி செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலத்து மாணவ மாணவிகளும் தமிழ்நாட்டிற்காக விளையாட்டுப் போட்டிகளில் 5 வருடங்கள் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்டால்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். அதனால் வெளிமாநில மாணவ, மாணவிகள், 5 ஆண்டுகாலம் தமிழ்நாட்டிற்காக விளையாடினால்தான் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக, கிராமப் பகுதிகளிலே இன்றைக்கு இளைஞர்கள் அதிகமாக படித்துவிட்டு இருக்கின்றார்கள். அவர்களுடைய உடல் திறனை மேம்படுத்தும் வகையிலே அனைத்து கிராமப் பகுதிகளிலும் உடற்பயிற்சி மையங்களை அமைப்பதற்கு நம்முடைய தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக, வரக்கூடிய நிதியாண்டிலே நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2004 பிப்ரவரி 12

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாட்டில் மாவட்டத் தலைநகரங்களில் ஒரு விளையாட்டுத் தலம் வீதம் உள்ளன. மற்றபடி ஒவ்வொரு கிராமத்திலும் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையினைப் பெற்று நிதிநிலைமையைப் பொறுத்து முயற்சி செய்ய அரசு முன்வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. அன்பழகன்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு விழாவையும் ஒரு வீர விளையாட்டாகத்தான் தமிழர்கள் கருதி வருகிறார்கள்; போற்றி வருகிறார்கள். ஆக, அந்த வகையிலே அந்த விளையாட்டையும் நம்முடைய விளையாட்டுக் கழகத்திலே சேர்ப்பார்களா? அதேபோன்று சங்க காலம் தொட்டு இன்று வரை தமிழகத்திலே பல்வேறு விளையாட்டுகள் இருக்கின்றன. அது எந்த எந்த விளையாட்டு என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரைப் போட்டு சித்திரவதை பண்ணாதீர்கள். (சிரிப்பு) வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி. ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் 20 முதல் 27 வரையிலான 8 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால், குழுவின் 26



2004 பிப்ரவரி 12] [திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி]

மற்றும் 27-வது அறிக்கைகளை அச்சிட்டு அளிக்க இயலவில்லை. இவ்வறிக்கைகளின் படிப்பெருக்கி நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிடப்பட்ட பிரதிகள் கிடைத்தவுடன் உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 189 முதல் 195 வரையிலான 7 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-10

### (இ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 43 முதல் 48 வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 43 முதல் 45 வரையிலான 3 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 3. முன்பண மானியக் கோரிக்கைகள், 2004-2005, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004-2005 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004-2005 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கின்றேன்.

### 2004-2005 ஆம் ஆண்டு உடனடிச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை (Demand) | | (ரூபாய் ஆயிரத்தில்) (Rupees in thousands) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் Revenue | மூலதனம் Capital | கடன் Loan |
| 1. | மாநிலச் சட்டமன்றம் | 4,55,65 | .. | .. |
| 2. | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 4,40,68 | .. | .. |
| 3. | நீதி நிருவாகம் | 47,51,33 | .. | .. |
| 4. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 130,31,65 | 17,90,37 | 8,33 |
| 5. | வேளாண்மைத் துறை | 291,89,38 | 2,24,26 | .. |
| 6. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை- கால்நடை பராமரிப்பு | 51,77,04 | 5,84 | .. |
| 7. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை- மீன் வளம் | 21,52,75 | 1,22,27 | .. |
| 8. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை- பால் வளம் | 4,34,13 | .. | .. |
| 9. | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 51,26,52 | 1,99,81 | .. |
| 10. | வணிக வரித் துறை- வணிக வரிகள் | 107,36,22 | .. | .. |
| 11. | வணிக வரித் துறை- முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு | 36,75,37 | .. | .. |
| 12. | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 439,39,19 | 2,31,78 | 5,41,43 |
| 13. | எரிசக்தித் துறை | 86,70,55 | 8,33,33 | 59,75,25 |
| 14. | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 44,06,05 | 32,95,46 | .. |
| 15. | நிதித் துறை | 183,82,70 | 1 | 7,03,77 |
| 16. | கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை- கைத்தறி மற்றும் துணி நூல் | 101,50,17 | .. | 1 |
| 17. | கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத்-தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | 18,68,37 | .. | .. |
| 18. | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 445,12,90 | 17,39,93 | .. |
| 19. | உயர் கல்வித் துறை | 215,69,48 | 90,93 | 1 |
| 20. | நெடுஞ்சாலைகள் துறை | 321,69,58 | 435,87,28 | .. |
| 21. | உள் துறை-காவல் | 395,95,86 | 46,17,41 | 16,67 |

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 12

| | | | |
|---|---|---|---|
| 22. உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 22,54,37 | .. | .. |
| 23. உள் துறை- சிறைச்சாலைகள் | 23,32,00 | 15,69,67 | .. |
| 24. உள் துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் - நிருவாகம் | 15,24,49 | .. | .. |
| 25. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 20,92,27 | 33,17,38 | 36,16,67 |
| 26. தொழில் துறை | 9,74,44 | 35,80,34 | .. |
| 27. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - செய்தி மற்றும் விளம்பரம் | 9,09,99 | 10,67 | .. |
| 28. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - சுற்றுலா | 5,38,39 | 4,73,35 | .. |
| 29. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - எழுதுபொருள் மற்றும் அச்சு | 18,93,67 | 10,00 | .. |
| 30. தகவல் தொழில்நுட்பவியல் துறை | 5,51,75 | .. | .. |
| 31. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 59,10,10 | 1,03,35 | .. |
| 32. சட்டத் துறை | 2,99,83 | .. | .. |
| 33. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 287,82,54 | 211,06,16 | 52,73,90 |
| 34. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 8,04,67 | .. | .. |
| 35. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 19,83,89 | 2,83,93 | .. |



2004 பிப்ரவரி 12] [திரு. சி. பொன்னையன்]

| | | | |
|---|---|---|---|
| 36. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை | 8,90,70 | .. | .. |
| 37. பொதுத் துறை | 39,06,35 | 3,33,33 | .. |
| 38. பொதுப் பணித் துறை | 300,04,30 | 202,99,75 | .. |
| 39. வருவாய்த் துறை | 305,68,09 | 7,82,95 | .. |
| 40. ஊரக வளர்ச்சித் துறை | 537,05,72 | 113,81,31 | .. |
| 41. பள்ளிக் கல்வித் துறை | 1,380,91,00 | 20,00,00 | 1,17 |
| 42. சிறு தொழில்கள் துறை | 22,69,44 | 47,83 | 16,67 |
| 43. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 137,09,86 | .. | .. |
| 44. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 12,49,38 | .. | .. |
| 45. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - இந்து சமய அறநிலையத் துறை | 9,22,84 | 80,31 | .. |
| 46. போக்குவரத்துத் துறை | 49,97,71 | 1,76 | .. |
| 47. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 9,13,21 | 6,91,34 | .. |
| 48. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 1,536,67,20 | .. | .. |
| 49. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 130,29,60 | .. | .. |
| பெரு மொத்தம்: | 7,995,13,37 | 1,228,12,41 | 161,53,88 |

[2004 பிப்ரவரி 12

## 4. அறிவிப்புகள்

### (அ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2004-2005, மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004-2005 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:—

"In pursuance of Clause 2 of Article 206 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for grants in advance during the financial year 2004-2005."

## 5. முன்பண மானியக் கோரிக்கைகள், 2004-2005, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004-2005 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004-2005 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 12-2-2004 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகையை 2004-2005 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2004 பிப்ரவரி 12] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### நிறைவேற்றப்பெற்ற 2004-2005 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

| | கோரிக்கை (Demand) | (ரூபாய் ஆயிரத்தில்) (Rupees in Thousands) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் Revenue | மூலதனம் Capital | கடன் Loan |
| 1. | மாநிலச் சட்டமன்றம் | 4,55,65 | .. | .. |
| 2. | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 4,40,68 | .. | .. |
| 3. | நீதி நிருவாகம் | 47,51,33 | .. | .. |
| 4. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 130,31,65 | 17,90,37 | 8,33 |
| 5. | வேளாண்மைத் துறை | 291,89,38 | 2,24,26 | .. |
| 6. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-கால்நடை பராமரிப்பு. | 54,77,04 | 5,84 | .. |
| 7. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-மீன் வளம் | 21,52,75 | 1,22,27 | .. |
| 8. | கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் | 4,34,13 | .. | .. |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 51,26,52 | 1,99,81 | .. |
| 10. | வணிக வரித் துறை- வணிக வரிகள் | 107,36,22 | .. | .. |
| 11. | வணிக வரித் துறை - முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு | 36,75,37 | .. | .. |
| 12. | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 439,39,19 | 2,31,78 | 5,41,43 |
| 13. | எரிசக்தித் துறை | 86,70,55 | 8,33,33 | 59,75,25 |
| 14. | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 44,06,05 | 32,95,46 | .. |
| 15. | நிதித் துறை | 183,82,70 | 1 | 7,03,77 |
| 16. | கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை- கைத்தறி மற்றும் துணி நூல் | 101,50,17 | .. | 1 |
| 17. | கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை - கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | 18,68,37 | .. | .. |
| 18. | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 445, 12,90 | 17,39,93 | .. |
| 19. | உயர் கல்வித் துறை | 215,69,48 | 90,93 | 1 |
| 20. | நெடுஞ்சாலைகள் துறை | 321,69,58 | 435,87,28 | .. |
| 21. | உள் துறை - காவல் | 395,95,86 | 46,17,41 | 16,67 |





| | | | | |
|---|---|---|---|---|
| 22. | உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 22,54,37 | .. | .. |
| 23. | உள் துறை- சிறைச்சாலைகள் | 23,32,00 | 15,69,67 | .. |
| 24. | உள் துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் - நிருவாகம் | 15,24,49 | .. | .. |
| 25. | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 20,92,27 | 33,17,38 | 36,16,67 |
| 26. | தொழில் துறை | 9,74,44 | 35,80,34 | .. |
| 27. | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - செய்தி மற்றும் விளம்பரம் | 9,09,99 | 10,67 | .. |
| 28. | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - சுற்றுலா | 5,38,39 | 4,73,35 | .. |
| 29. | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - எழுதுபொருள் மற்றும் அச்சு | 18,93,67 | 10,00 | .. |
| 30. | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 5,51,75 | .. | .. |
| 31. | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 59,10,10 | 1,03,35 | .. |
| 32. | சட்டத் துறை | 2,99,83 | .. | .. |
| 33. | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 287,82,54 | 211,06,16 | 52,73,90 |
| 34. | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 8,04,67 | .. | .. |
| 35. | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 19,83,89 | 2,83,93 | .. |

| | | | | |
|---|---|---|---|---|
| 36. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை | 8,90,70 | .. | .. |
| 37. | பொதுத் துறை | 39,06,35 | 3,33,33 | .. |
| 38. | பொதுப் பணித் துறை | 300,04,30 | 202,99,75 | .. |
| 39. | வருவாய்த் துறை | 305,68,09 | 7,82,95 | .. |
| 40. | ஊரக வளர்ச்சித் துறை | 537,05,72 | 113,81,31 | .. |
| 41. | பள்ளிக் கல்வித் துறை | 1,380,91,00 | 20,00,00 | 1,17 |
| 42. | சிறு தொழில்கள் துறை | 22,69,44 | 47,83 | 16,67 |
| 43. | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 137,09,86 | .. | .. |
| 44. | தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 12,49,38 | .. | .. |
| 45. | தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - இந்து சமய அறநிலையத் துறை | 9,22,84 | 80,31 | .. |
| 46. | போக்குவரத்துத் துறை | 49,97,71 | 1,76 | .. |
| 47. | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 9,13,21 | 6,91,34 | .. |
| 48. | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 1,536,67,20 | .. | .. |
| 49. | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 130,29,60 | .. | .. |
| | பெரு மொத்தம்: | 7,995,13,37 | 1,228,12,11 | 161,53,88 |



## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (13-2-2004) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர் பேரவை முற்பகல் 11-13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

41. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (அங்காடிகள் மற்றும் மது அருந்தகங்கள்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 12-11-2003 ஆம் நாளிட்ட 295 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

42. 25 புராதன (கிளாசிக்) மற்றும் நீண்ட காலத்திற்கு முன் இறக்குமதி செய்யப்பட்ட (வின்டேஜ்) மோட்டார் வண்டிகளுக்கும், 8 புராதன (கிளாசிக்) மற்றும் நீண்ட காலத்திற்கு முன் இறக்குமதி செய்யப்பட்ட (வின்டேஜ்) மோட்டார் சைக்கிள்களுக்கும் செலுத்தத்தக்க ஆண்டு வரியைப் பொறுத்தவகையில், வண்டிகள் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு முறையே மோட்டார் வண்டி ஒன்றுக்கு ரூபாய் 1,000/- என்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு ரூபாய் 250/- என்றும், ஒரு தடவை செலுத்தக்கூடிய வரி முறையானது 2004 ஏப்ரல் 1 அன்று முதற்கொண்டு செயலுக்கு வரும் என்றும் திருத்தியமைத்தது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 29-10-2003 ஆம் நாளிட்ட 1037 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன்வைக்கப்பெற்றது]





43. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் இருபத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு கழகத்தின் நிறுவனங்கள் சட்டத்தின் [மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

44. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

45. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஐம்பத்தி நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

46. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

47. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

48. சென்னை, கெல்லீஸ், மில்லர்ஸ் சாலையில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர் இல்லத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் 07-12-2001 ஆம் நாளன்று நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு வழிகோலிய காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட திரு. நீதியரசர் கே.எஸ். பக்தவத்சலம் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

[2004 பிப்ரவரி 12

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

21. 2004-2005 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள் (53 புத்தகங்கள்) (கோரிக்கை எண் 50 தவிர)

22. 2004-2005 ஆம் ஆண்டில் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

23. 2004-2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.

24. 2004-2005 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு-பகுதி-1

25. 2004-2005 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு-பகுதி-2

26. 2004-2005 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்

27. 2004-2005 ஆம் ஆண்டுத் திட்டம் (திட்டம் - வரவு-செலவுத் திட்ட இணைப்பு) (2004-2005 ஆம் ஆண்டு விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடுகள்)

28. 2004-2005 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி-2 திட்டங்கள்)

29. 2004-2005 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.

30. 2004-2005 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல் (தமிழ், ஆங்கிலம்)

31. 2004-2005 ஆம் ஆண்டு செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

32. 2004-2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து நிதி மற்றும் உணவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பொன்னையன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

33. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்திற்கு பதில் அளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 10-2-2004 அன்று ஆற்றிய உரை. (தமிழ்)



2004 பிப்ரவரி 12]

34. மதிப்பீட்டுக் குழுவின் இருபதாவது அறிக்கை. (2003-2004)

35. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தி ஒன்றாவது அறிக்கை. (2003-2004)

36. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தி இரண்டாவது அறிக்கை. (2003-2004)

37. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை. (2003-2004)

38. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை. (2003-2004)

39. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தி ஐந்தாவது அறிக்கை. (2003-2004)

40. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தி ஆறாவது அறிக்கை. (2003-2004)

41. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தி ஏழாவது அறிக்கை. (2003-2004)

42. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்தி ஒன்பதாவது அறிக்கை. (2003-2004)

43. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூறாவது அறிக்கை. (2003-2004)

44. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று ஒன்றாவது அறிக்கை. (2003-2004)

45. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று இரண்டாவது அறிக்கை. (2003-2004)

46. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை. (2003-2004)

47. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று நான்காவது அறிக்கை. (2003-2004)

48. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை. (2003-2004)

49. மனுக்கள் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை. (2003-2004)

50. மனுக்கள் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கை. (2003-2004)

*51.* மனுக்கள் குழுவின் நாற்பத்தி ஐந்தாவது அறிக்கை. *(2003-2004)*

*52.* மனுக்கள் குழுவின் நாற்பத்தி ஆறாவது அறிக்கை. *(2003-2004)*

*53.* மனுக்கள் குழுவின் நாற்பத்தி ஏழாவது அறிக்கை. *(2003-2004)*

*54.* மனுக்கள் குழுவின் நாற்பத்தி எட்டாவது அறிக்கை. *(2003-2004)*

*55.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை. *(2003-2004)*

*56.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கை. *(2003-2004)*

*57.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்தி ஐந்தாவது அறிக்கை. *(2003-2004)*

------

185890
600 008

*அரசு மைய அச்சகம், சென்னை-600 079.*

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.